



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, மேல்மருவத்தூர், ஆன்மீகத் தொண்டு மக்கள் இயக்கத்தின் தலைவர் கோ.ப.அன்பு மற்றும் துணைத் தலைவர் கோ.ப.செந்தில் ஆகியோரை, முன்னாள் அமைச்சர்கள் சட்டமன்ற எதிர்க்கட்சி கொறடா எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் சந்தித்து வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு ஆதரவு கோரினர். முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் து.கதிர்ஆனந்த், எம்.எஸ்.தரணிவேந்தன், க.செல்வம் மற்றும் பலர் உடன் உள்ளனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணி பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திட்டினார். இதில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் இல.பத்மநாபன் உள்பட மாநில மாவட்ட, நகர, வட்டக் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் கேட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் – முன்னாள் அமைச்சர் எஸ். ரகுபதி, மதுராந்தகம் ஒன்றிய கவுன்சிலர் தமிழ்குமாரி ரவிச்சந்திரன் குடும்பத்தினருடன் வீடு வீடாகச் சென்று தீவிர பிரச்சாரம் மேற்கொண்டனர்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாருக்கு எதிரான வழக்குகளை

அவசரமாக விசாரிக்க உச்சநீதிமன்றம் ஒப்புதல்!

புதுடெல்லி, அக்.1- தலைமைதேர்தல்ஆணையர்ஞானேஷ்குமார்தன்னிச்சையாக செயல்பட்டதாக தொடரப்பட்ட வழக்குகளை அவசரமாக விசாரிக்க உச்சநீதிமன்றம் சம்மதம் தெரிவித்துள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தில்உள்ளமற்ற2தேர்தல் ஆணையர்களிடம்எந்தவித ஆலோசனையும்ஒப்புதலும் பெறாமல். தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார்தன்னிச்சையாக முக்கியமுடிவுகளைஎடுத்ததாக தொடர் குற்றச்சாட்டுகள் எழுந்தன. அரசியல் சாசன அமைப்பான தேர்தல் ஆணையத்தைஒருதனிநபர் தனது விருப்பம்போல் வழி நடத்துவது முறையற்றது என பல்வேறு அரசியல் கட்சிகள்கடும்கண்டனம்தெரிவித்து வந்தன.

மேலும், இந்த விவகாரத்தை கண்டித்து கரப்பான் பூச்சி அமைப்பின் சார்பில் நாடுதழுவிய போராட்டங்களும்அறிவித்துள்ளது.சூழலில், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் எனவும், அவரை உடனடியாக பதவியிலிருந்துநீக்கவேண்டும் எனவும் உச்சநீதிமன்றத்தில் பல்வேறு புதிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்தமனுக்கள்தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஜாய்மால்யா பாக்சி மற்றும் வி.மோகனா ஆகியோர்அடங்கியஅமர்வு முன் மூத்த வழக்கறிஞர் விகாஷ் சிங் மூலம் அவசர முறையீடாககொண்டுவரப் பட்டது.

அப்போது வாதாடிய அவர், 'தேர்தல் ஆணையத்தில்உள்ளமற்ற2ஆணையர்களின் ஒப்புதல் இல்லாமல் தலைமை தேர் தல் ஆணையர்ஞானேஷ்குமார்தன்னிச்சையாக முடி வெடுக்க அதிகாரம் உள் ளதா என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது; ஆணையத் தின் முடிவுகள் அனைத்தும் ஒருமனதாகவோ அல் லது பெரும்பான்மை அடிப்படையிலோதான் இருக்க வேண்டும் என்ற சட்டப் பூர்வ விதிமுறைகளை மீறி எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும்ரத்து செய்ய வேண்டும்' என்று வாதிட்டார்.

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளில் தனிநபர் ஆதிக்கம் இருப்பதாக எழுந்திருக்கும் சுடுமையான சந்தேகங்களை தெளிவுபடுத்தும் வகையில் இந்த மனுக்களை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்றும் வழக்கறிஞர் வலியுறுத்தினார். மூத்த வழக்கறிஞர் முன்வைத்த அழுத்தமான வாதங்களை ஏற்றுக்கொண்ட தலைமை நீதிபதிசூர்யகாந்த்தலைமையிலான அமர்வு, ஜனநாயக நடைமுறைகளைபாதுகாக்கும் நோக்கில் மனுக்களை பரிசீலிப்பதாக உறுதி அளித்தது.

அதனைத் தொடர்ந்து, தலைமை தேர்தல் ஆணையர்ஞானேஷ்குமாருக்குஎதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் வரும் வாரம் முறைப்படி பட்டியலிட்டு முழுமையாக விசாரிப்பதாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் அதிரடி உத்தரவு பிறப்பித்தனர்.

குமாரபாளையம் எஸ்.பாலு மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சேலம், அக். 1- சேலம் மாவட்டம் குமாரபாளையம் கழக முன்னணித் தோழரும் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக போட்டியிட்டவருமான சேர்மன் எஸ்.பாலு அவர்கள் நேற்று (30.9.2026) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்ததும் கழக முன்னணியினர் கழகத்



தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த சேர்மன் எஸ்.பாலு உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; இந்த ஆட்சியிலே லஞ்சம் கொடுத்தாதான் அரசு வழக்கறிஞராக முடியும்ன்னு சொல்றது உண்மையா இருக்குமா?

பட்டணம் : **ஆமாமய்யா; உயர்நீதிமன்றமே இதப் பத்தி விசாரிக்க லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவு போட்டிருக்காம். உண்மை இல்லாமலா இருக்கும். 'தூய ஆட்சி'ன்னு சொல்றவர்தான், என்ன பண்ண போறாரோ தெரியல!**

தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்!

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. பிரச்சாரம்!



தேசிய முற்போக்கு திராவிட கழக பொதுச் செயலாளர் திருமதி.பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. அவர்களின் 101 - தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைதேர்தல் சுற்றுப்பயண விவரம் :-

நாள் : 01.10.2026 (வியாழக்கிழமை)

வ.எண்	நேரம்	ஒன்றிய / நகர / பேரூர் கழகங்கள்	இடம்
1.	மாலை 5.45	மூலனூர் கிழக்கு ஒன்றியம்	நால்ரோடு (கருப்பன்வலசு)
2.	மாலை 7.15	கொளத்துப்பாளையம் பேரூர்	கரையூர்
3.	இரவு 8.15	தாராபுரம் மேற்கு ஒன்றியம்	அலங்கியம்

தேர்தல் பணிக்குழு

101 - தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி



தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் கிழக்கு ஒன்றியம், கொளத்துப்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கே.துரைசாமி, கருணைபிரகாஷ் மற்றும் மங்களம் என். ரவி முன்னிலையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் காமாட்சி, பொருளாளர் சத்தியமூர்த்தி, துணைச் செயலாளர் பிலால்உசேன், கொளத்துப்பாளையம் ஒன்றிய துணை செயலாளர் சி.செல்வக்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் கிழக்கு ஒன்றியம், குமாரபாளையம் ஊராட்சி பகுதியில் திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொருளாளர் விஜயன், ஒன்றிய கழக செயலாளர்கள் பி.சி.தங்கம், கே.சி.பாலு, திருப்பூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.சசிகுமார், தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ம.அசோக்குமார் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.